GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5A**

**6764–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is an acknowledgement? Explain the effect of an acknowledgement under the Law of Limitation.

   ஒப்பளிப்பு என்றால் என்ன? ஒப்பளித்தலின் காலவரையறைச் சட்டத்தின் கீழ் ஒப்பளித்தலின் மூலம் ஏற்படும் விளைவுகளை விளக்கவும்.

2. What is 'Res-Judicata'? What are the conditions for its application?

   'முன் தீர்ப்புத் தடை' என்றால் என்ன? அது பொருந்தி அமைவதற்கான நிபந்தனைகள் யாவை?

3. Explain the procedures to be followed while filing a suit against the Government.

   அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் யாவை என்பதை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss about the jurisdiction of civil courts to try suits.

   உரிமையியல் நீதிமன்றங்களின் வழக்குகளை விசாரணை செய்வதற்கான அதிகார வரம்புகளைப் பற்றி விவாதிக்கவும்.

5. Explain the powers of the first appellate court.

முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை பற்றி விளக்குக.

6. Summarise the provisions for abatement of suits under the Civil Procedure Code.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்கு அற்றுப் போதல் குறித்த வகைமுறைகளை தொகுத்து எழுதுக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Impounding of Documents

ஆவணங்களை முடக்கி வைத்தல்

(b) Precept

பற்றாணை

(c) Representative Suit

பிரதிநிதித்துவ வழக்கு

(d) Preliminary Decree

முதல்நிலைத் தீர்ப்பாணை

(e) Legal Representative

சட்டமுறையான பிரதிநிதி

(f) Order

உத்தரவு

(g) Proclamation of sale.

விற்பனை பிரகடனம்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'S', 'T, 'U' brothers, own joint family property at Chennai. 'S' resides in Tiruvallur, 'T' resides in Arakkonam and 'U' resides in Kancheepuram. S, T, U agreed to file partition suit at District Court, Kancheepuram. Whether the suit is maintainable?

'S', 'T, 'U' என்ற மூன்று சகோரார்களுக்கும் சென்னையில் பொதுக் குடும்பத்திற்கு பாத்தியபட்ட சொத்து உள்ளது. 'S' என்பவர் திருவள்ளூரிலும், 'T' என்பவர் அரக்கோணத்திலும், 'U' என்பவர் காஞ்சிபுரத்திலும் வசித்து வருகிறார்கள். S, T, U மூவரும் தங்கள் பாகப்பிரிவினை வழக்கினை காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடிவு செய்கின்றனர். அந்த வழக்கு நிலை நிற்கத்தக்கதா?

9. 'X' residing in Madurai beats 'Y' in Salem. 'Y' sues 'X' in Madurai for compensation. Examine the jurisdiction of the court in Madurai.

மதுரையில் வசிக்கும் 'X' என்பவர் 'Y' என்பவரை சேலத்தில் வைத்து அடிக்கிறார். இழப்பீடு கோரி 'Y' என்பவர் 'X' மீது மதுரையில் வழக்குத் தொடர்கிறார். இதில் மதுரை நீதிமன்றத்தின் ஆள்வரை எல்லையினை ஆய்க.

10. 'M' sues 'N' and obtained a decree against him. 'M' applies for execution of his decree against 'N', but dies during the pendency of the execution proceedings. State whether execution petition will continue or abate.

'M' என்பவர் 'N' என்பவர் மீது வழக்கிட்டு 'N'க்கு எதிராக தீர்ப்பாணை பெறுகிறார். தீர்ப்பாணையினை நிறைவேற்ற மனுதாக்கல் செய்து நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும்போது 'M' இறந்து விடுகிறார். இதில் நிறைவேற்று மனு தொடருமா? அல்லது முடிவுக்கு வருமா என்பதை கூறவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5B**

**6765–25**

(For the candidates admitted from 2017-2018 to 2021-2022)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the principal features of a fair trial and point out how far the Criminal Procedure Code fulfills it.

   ஒரு நேரிய வழக்கு விசாரணையின் முக்கிய தன்மைகளை விவாதித்து அதனை குற்றவியல் நடைமுறைச் சட்டம் எந்த அளவிற்கு நிறைவு செய்கிறது என்பதனை விவாதிக்கவும்.

2. Examine the procedure for execution of death sentence and compare it with the execution procedure of imprisonment with the help of decided cases under Cr.P.C.

   மரண தண்டனை நிறைவேற்றும் நடைமுறைப் பற்றி கு.ந.மு. சட்டம் எவ்வாறு விளக்கியுள்ளது என்பதை ஆராய்ந்து, அந்த நடைமுறைகளை சிறை தண்டனை நிறைவேற்றும் நடைமுறைகளோடு ஒப்பிடவும். இதை தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் விளக்கவும்.

3. Discuss the powers and functions of the Juvenile Justice Board.

   இளஞ்சிறார் நீதி வாரியத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "A person once convicted or acquitted cannot be tried again for the same offence" – Explain.

   "ஒரு நபர் ஒரு முறை தண்டிக்கப்பட்டோ அல்லது விடுதலை செய்யப்பட்டோ இருந்தால், அதே குற்றத்திற்காக மறுமுறை அவரை விசாரணைக்கு உட்படுத்துதல் கூடாது" - விளக்குக.

5. Explain the provisions relating to maintenance of wife, children and parents as provided under the Code of Criminal Procedure.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மனைவி, குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரை பராமரிப்பது தொடர்பான சட்டப்பிரிவுகளை விளக்குக.

6. What is bail? Under what circumstances bail may be granted in non-bailable offences.

பிணையம் என்றால் என்ன? பிணை விடாக்குற்றங்களுக்கு எத்தகைய சூழ்நிலைகளில் பிணையம் வழங்கப்படலாம்?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Complaint

குற்ற முறையீடு

(b) Executive Magistrate

நிர்வாகத்துறை நடுவர்

(c) Remission of Sentence

தண்டனைக் குறைப்பு

(d) Cognizable Offence

புலன் கொள் குற்றம்

(e) Proclaimed offender

அறிவிக்கப்பட்ட குற்றவாளி

(f) Victim compensation

பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு

(g) Probation officer Report

நன் நடத்தை அதிகாரியின் அறிக்கை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Judicial Magistrate after the issue of the proclamation order further orders for attachment of the property belonging to the proclaimed person. Discuss the validity of the order.

ஒரு நீதித்துறை நடுவர் சாற்றறிவிப்பிற்குப் பின்னர் அறிவிக்கப்பட்டவரின் சொத்துகளை பறிமுதல் (பற்றுகை) செய்ய மேலும் ஆணையிடுகிறார். இவ்வாணையின் செல்லுந்தன்மையினை விவாதிக்கவும்.

9. 'A' pleads guilty in a murder case, before the Court of Sessions. Thereafter he prefers an appeal against conviction to High Court. Will he succeed? Decide.

'A' என்பவர் ஒரு கொலை வழக்கில் அமர்வு நீதிமன்றத்தின் முன்பு குற்றத்தை ஒப்புக்கொள்கிறார். அதன் பிறகு தண்டனையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையிடு செய்கிறார். அவர் வெற்றி பெறுவாரா? தீர்மானிக்க.

10. 'A' committed an offence within the local limits of the jurisdiction of court at Madurai and he was arrested within the local limits of the jurisdiction of court at Tirunelveli. In which jurisdiction, A may be tried. Decide.

'A' என்பவர் மதுரை நீதிமன்ற நிலவர ஆள்வரையினுள் குற்றம் புரிந்துள்ளார். அவர் திருநெல்வேலி நீதிமன்ற ஆள்வரையினுள் கைதாகிறார். அவர் மீது எந்த நீதிமன்ற நிலவர ஆள்வரையினுள் வழக்கு நடத்த முடியும்? தீர்மானிக்க.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5C** **6766–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

ENVIRONMENTAL LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically analyse the environmental policies in India.

   இந்தியாவில் சுற்றுப்புறச்சூழல் குறித்த கொள்கைகளை விமர்சித்து ஆய்வு செய்க.

2. Elucidate the powers of the Water Board in giving directions against defaulting industries.

   தவறிழைக்கும் தொழிற்சாலைகளுக்கு எதிராக வழிகாட்டுதல்களை வழங்கும் நீர்வாரியத்தின் அதிகாரத்தை இயம்புக.

3. State the remedies available for environmental pollution under the Civil Procedure Code, 1908.

   1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் சுற்றுப்புறச்சூழல் மாசுக்கான தீர்வழிகளைக் கூறுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the sources of noise pollution and its effects? Explain the rules to combat noise pollution.

   ஒலி மாசின் மூலங்கள் மற்றும் விளைவுகள் யாவை? ஒலி மாசை கட்டுப்படுத்துவதற்கான விதிகளை விளக்குக.

5. Explain the various principles evolved by the Supreme Court of India to protect the environment.

சுற்றுச்சூழலை பாதுகாக்க இந்திய உச்சநீதிமன்றம் உருவாக்கிய பல்வேறு கோட்பாடுகளை விளக்குக.

6. Discuss the significance of various International Conventions to protect the environment.

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பிற்கான பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) E-Waste.

இ-கழிவு.

(b) Hazardous substances.

அபாயகரமான பொருட்கள்.

(c) Bio-Reserve.

பல்லுயிர் இருப்பு.

(d) Environmental Audit.

சுற்றுச்சூழல் தணிக்கை.

(e) Land Pollution.

நில மாசு.

(f) Coastal Regulation Zone.

ஒழுங்குப்படுத்தப்பட்ட கடலோர மண்டலம்.

(g) National Park.

தேசிய பூங்கா.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A government coal sector mining company allegedly violated environmental green norms. A case was filed before the National Green Tribunal and it directed the government to deposit 100 crores. The Government filed an appeal against the order of NGT before the Supreme Court – Decide.

அரசு நிலக்கரி சுரங்க நிறுமம் சுற்றுப்புறச்சூழல் பசுமை விதிமுறைகளை மீறியது. வழக்கு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்டு 100 கோடி வங்கி உத்திரவாதம் அரசு அளிக்க வேண்டும் என்று தீர்ப்பாயம் ஆணையிட்டது. இதை எதிர்த்து மாநில அரசு உச்ச நீதிமன்றத்திடம் மேல்முறையீடு செய்தது. தீர்மானிக்கவும்.

9. The Directorate General of foreign trade permitted to import of goods to be dumped in India under the export and import policy. "Waste links", an NGO filed a case before the National Green Tribunal claiming that e-waste is dumped in India which is contrary to e-waste rules. – Decide.

இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையின் படி வெளிநாடு வர்த்தக பொது இயக்குனரகம் இந்தியாவில் வெளிநாட்டு கணினி கழிவுகளை இறக்குமதி செய்ய அனுமதித்தது."கழிவுகள் தொடர்பகம்" என்ற தன்னார்வு தொண்டு நிறுவனம் இந்தியாவில் கணினி கழிவுகளை கொட்டுவது கணினி கழிவுகள் விதிகளுக்கு புறம்பானது என்று பசுமை தீர்ப்பாயத்தின் முன் வழக்கிட்டது – தீர்மானிக்கவும்.

10. Government Environmental Agency found high level of toxic pesticides in Artificial drink of a famous soft drink company. It was reported in news paper. The soft drink company filed a case against environmental agencies on the ground that it violates their rights – Decide.

அரசு சுற்றுப்புறச்சூழல் முகமை ஒரு புகழ்வாய்ந்த மென்பான நிறுமத்தின் தயாரிப்பு பானங்களில் அதிக அளவில் நச்சுத் தன்மை வாய்ந்த பூச்சிக் கொல்லி மருந்து இருப்பதாக அறிந்து அதனை நாளிதழில் செய்தியாக வெளியிட்டது. இவ்வெளியீடு தங்கள் உரிமைகளை மீறுவதாக கூறி அரசு சுற்றுப்புறச்சூழல் முகமையை எதிர்த்து மென்பான நிறுமம் வழக்கிட்டது – தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5D**

**6554–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is disablement? Explain the amount of compensation for disablement under the Employee's Compensation Act, 1923.

   உடற்தகுதியிழப்பு என்றால் என்ன? பணியாளர் இழப்பீட்டுச் சட்டம், 1923ன் கீழ் உடற்தகுதி இழப்பிற்கான இழப்பீட்டுத் தொகையைப் பற்றி விளக்குக.

2. Explain the restrictions in employment of children and women in a factory.

   ஒரு தொழிற்சாலையில் குழந்தைகள் மற்றும் பெண்களை வேலைக்கு அமர்த்துவதில் உள்ள வரையறைகளை விளக்குக.

3. Explain the provisions relating to adjudication of disputes and claims under the Employee's State Insurance Act, 1948.

   தொழிலாளர் அரசு காப்பீடு சட்டம் 1948ன் கீழ் சச்சரவுகளின் தீர்வு முறைகள் மற்றும் கோருரிமை தொடர்பான சட்ட வகையங்களை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define gratuity and explain when gratuity can be forfeited.

   பணிக்கொடை என்பதை வரையறை செய்து பணிக்கொடை எப்பொழுது பறிமுதல் செய்யப்படும் என்பதை விளக்குக.

5. What are the establishments exempted from the Employee's Provident Fund Act, 1952? What is the rationale behind such exemption.

1952–ஆம் ஆண்டின் பணியாளர் வைப்புநிதிச் சட்டத்தில் விலக்களிக்கப்பட்டுள்ள தொழில்கள் யாவை? அவற்றிற்கு எந்த அடிப்படையில் அந்த விலக்களிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன?

6. Explain the kinds of Bonus under the Payment of Bonus Act, 1965.

மீதூதியம் வழங்கல் சட்டம், 1965ன் கீழ் மீதூதியத்தின் வகைகளை விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Concept of Social Security

சமூகப் பாதுகாப்பு கருத்தமைவு

(b) Set on and Set off

ஒதுக்கிவைத்தல் மற்றும் எதிரீடு செய்தல்

(c) Restrictions on opening and closing of shops.

கடைகள் திறப்பது மற்றும் மூடுதல் குறித்தக் கட்டுப்பாடுகள்

(d) Maternity Benefit

பேறுகால சலுகை

(e) Notice by Occupier

பொறுப்பாட்சியாளரின் அறிக்கை

(f) Occupational diseases

தொழிற்சார்ந்த நோய்கள்

(g) ESI Corporation

இ.எஸ்.ஐ. கழகம்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Selvam an employee of a company attained the age of superannuation and retired on 31.5.2024 after 25 years of continuous service. His last drawn salary was Rs. 10,000 per month. Is he entitled to claim gratuity?

செல்வம் ஒரு நிறுவனத்தின் தொழிலாளர், வயது முதிர்வின் காரணமாக 25 வருட தொடர் பணிக்குப் பிறகு 31.5.2024ல் பணி நிறைவு செய்தார். அவர் இறுதியாக பெற்ற மாத ஊதியம் ரூ. 10,000 ஆகும். அவர் பணிக்கொடை கோர இயலுமா?

9. A part-time nurse is employed for an ambulance room as required under the Factories Act, 1948. Decide whether she is a worker or not.

தொழிற்சாலைகள் சட்டம், 1948ன் கீழ் தேவைப்படும் ஆம்புலன்ஸ் அறையில் செவிலியர் ஒருவர் பகுதி நேரமாக பணியமர்த்தப்படுகிறார். அந்தச் செவிலியர் தொழிலாளியா இல்லையா என்பதை முடிவு செய்க.

10. Mr. Jegan is a employee of textile shop. The employer has allowed him to work $10\frac{1}{2}$ hours in a day. How much time he is entitled to interval under the TN Shops and Establishment Act, 1947?

ஜெகன் என்பவர் துணிக்கடையில் வேலை பார்க்கிறார். அவரை அவரது முதலாளி ஒரு நாளுக்கு $10\frac{1}{2}$ மணி நேரம் வேலை செய்ய அனுமதிக்கிறார். தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947ன் படி அவர் எவ்வளவு காலம் இடைவேளை பெற்றுக் கொள்ள முடியும்?

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

TA5E

6555–25

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

Time : $2\frac{1}{2}$ hours　　　　Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "No tax shall be levied or collected except by the authority of Law" – Justify with constitutional provisions.

   "சட்டத்தின் அதிகாரத்தால் தவிர வரி விதிக்கப்படவோ அல்லது வசூலிக்கவோ கூடாது" – அரசமைப்புச் சட்ட வகைமுறைகள் கொண்டு நியாயப்படுத்துக.

2. Differentiate short term capital gain from long term capital gain and explain the exemptions in computation of capital gain.

   குறுகிய கால மூலதன ஆதாயத்தை நீண்டகால மூலதன ஆதாயத்திலிருந்து வேறுபடுத்தி, மூலதன ஆதாயத்தை கணக்கிடுதலில் உள்ள விதிவிலக்குகளை விளக்குக.

3. Enumerate the kinds of duties and prohibited goods under the Customs Act - 1962.

   சுங்க வரிச் சட்டம், 1962-ன் கீழ் சுங்க வரியின் வகைகளையும் தடைசெய்யப்பட்ட பொருட்களையும் குறிப்பிடுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss in detail the procedure for registration under the TNGST Act, 2017.

   தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவை வரி சட்டம், 2017-ன் கீழ் பதிவு செய்யும் நடைமுறையை தெளிவாக விளக்குக.

5. Define Tax and distinguish between tax, fee, fine and toll.

'வரி' என்பதை வரையறுத்து, வரி, கட்டணம், அபராதம் மற்றும் வழிச்சுங்கம் ஆகியவற்றை வேறுபடுத்துக.

6. Explain the incomes that constitutes salary.

ஊதியத்தில் உள்ளடங்கும் வருமானங்களை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

Answer any FIVE questions.

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Section 80 C deductions.

பிரிவு 80 C கழிவுகள்.

(b) GST Council.

ஜிஎஸ்டி கவுன்சில்.

(c) Agricultural income.

விவசாய வருமானம்.

(d) Depreciation.

தேய்மானம்.

(e) Clubbing of income.

வருமானத்தை ஒன்றிணைத்தல்.

(f) Canons of taxation.

வரிவிதிப்பு கட்டளைகள்.

(g) Letter of Credit.

நம்பிக்கை நாணயக் கடிதம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ramesh owns a house property which is let-out for Rs. 6,500 per month. The fair rent of the property is Rs. 90,000, Municipal taxes paid during the year for each half year is Rs. 3,200. Compute the income tax from house property for the assessment year 2025-2026.

ரமேஷ் என்பவர் தனது வீட்டுச்சொத்தை மாத வாடகைக்காக ரூ. 6,500/-க்கு வாடகைக்கு விட்டார். அச்சொத்தின் நியாய வாடகையானது ரூ. 90,000 ஆகும். அவ்வருடத்தில் அரையாண்டுக்கு ரூ. 3,200 வீதம் முனிசிபல் வரி (நகராட்சி வரி) செலுத்தினார். வரிமதிப்பீட்டாண்டு 2025-2026ல் வீட்டு சொத்திலிருந்து அவர் செலுத்த வேண்டிய வருமான வரியினைக் கணக்கிடவும்.

9. The assessable value of an imported Television is Rs. 1,00,000. Basic customs duty is 10%, integrated tax leviable is 12% and social welfare surcharge is 10% on duty. Compute the total amount of total customs duty and integrated tax payable.

இறக்குமதி செய்யப்பட்டத் தொலைக்காட்சிப் பெட்டியின் மதிப்பு ரூ. 1,00,000/-. அடிப்படை சுங்க வரி 10%, விதிக்கத்தக்க ஒருங்கிணைந்த வரி 12% மற்றும் சமூகநல கூடுதல் கட்டணமானது சுங்க வரியில் 10% ஆகும். மொத்த சுங்க வரி மற்றும் ஒருங்கிணைந்த வரியை கணக்கிடுக.

10. Mr. Raghu, an employee of the Central Government receives Rs. 3,00,000 as basic salary, Rs. 30,000 as Dearness Allowance and Rs. 16,000 as Entertainment Allowance per annum. Find out the taxable Entertainment allowance amount for the assessment year 2025-2026.

மத்திய அரசு பணியாளரான திரு. ரகு என்பவர் ஆண்டுதோறும் அடிப்படை ஊதியமாக ரூ. 3,00,000, அக விலைப்படி தொகையாக ரூ. 30,000 மற்றும் பொழுதுபோக்கு படித்தொகையாக ரூ. 16,000 பெறுகிறார். வரி மதிப்பீட்டு ஆண்டான 2025-2026ல் அவரது வரிவிதிக்கத்தக்க பொழுதுபோக்கு படித்தொகையை கண்டறிக.

---

GOVERNMENT LAW COLLEGE, TIRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA5G**

**6556–25**

(For the candidates admitted from 2022-2023 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, MAY 2025.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA, 2023.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss in detail the provisions relating to compelling process to appear an accused person before criminal court as provided under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023-ன் கீழ் குற்றவியல் நீதிமன்றத்திற்கு முன் குற்றம்சாட்டப்பட்ட நபர் ஆஜராவது தொடர்பாக உள்ள பிரிவுகளை விரிவாக விளக்கவும்.

2. State elaborately the BNSS provisions relating to suspension, remission and commutation of sentence.

   தண்டனையை நிறுத்திவைத்தல், குறைத்தல் மற்றும் மாற்றுதல் ஆகியவை குறித்த பி.என்.எஸ்.எஸ். பிரிவுகளை விரிவாகக் கூறவும்.

3. Explain the provisions relating to maintenance of wives, children and parents.

   மனைவிகள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் பராமரிப்புத் தொடர்பான பிரிவுகள் பற்றி விரிவாக விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the constitution and powers of criminal court.

   குற்றவியல் நீதி மன்றத்தின் அமைப்பு மற்றும் அதிகாரங்களை விவரி.

5. Explain the circumstances under which a convicted person may be released on probation under BNSS, 2023.

குற்றவாளி என தீர்மானிக்கப்பட்ட ஒருவரை நன்னடத்தை கண்காணிப்பில் விடுவிக்கும் சூழ்நிலைகளை பி.என்.எஸ்.எஸ். 2023 கீழ் உள்ள சட்ட வகையங்களை கொண்டு விவரிக்கவும்.

6. Explain the procedure to be followed by trial of summons cases.

அழைப்பாணை வழங்கு விசாரணையில் கடைபிடிக்கப்படும் நடைமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Judicial Confession

நீதிமன்ற குற்ற ஒப்புதல்

(b) Speedy trial

துரித வழக்கு விசாரணை

(c) Transfer of criminal case

குற்ற வழக்கினை மாற்றுதல்

(d) Remand

காவல் வைப்பு

(e) Arrest

கைது

(f) Public Prosecutor

அரசு குற்றவியல் வழக்கறிஞர்

(g) Charge

வனையப்பட்ட குற்றச்சாட்டு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A magistrate not empowered to try an offence summarily by law tries an offence summarily. Discuss the validity of the proceedings.

குறுகு முறை விசாரணை முறையில் வழக்கு விசாரணை நடத்த அதிகாரமளிக்கப்படாத குற்றவியல் நடுவர் குறுகு முறையில் வழக்கு விசாரணை நடத்தினார். அவருடைய நடவடிக்கையின் செல்லும் நிலையை விவாதிக்க.

9. There is an inordinate delay in registering the F.I.R. by police. Decide the admissibility and legality of the same during trial.

முதல் தகவல் அறிக்கையானது காவல் துறையினரால் கால தாமதமாக பதிவு செய்யப்படுகிறது. நீதிமன்ற விசாரணையின் போது முதல் தகவல் அறிக்கை ஆவணத்தின் சட்டத் தன்மையை தீர்மானிக்க.

10. 'A' accept the guilty in a case before Sessions Court. He wants to go for an appeal against conviction. Advise him.

'அ' என்பவர் அமர்வு நீதிமன்றத்தின் முன் குற்றத்தை ஏற்றுக் கொள்கிறார். அவர் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய விரும்புகிறார். அறிவுரை வழங்கவும்.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY